# ராணுவத்திற்கு ஆட்களை திரட்ட அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)
இராணுவத்திற்குப் புதிதாகப் பெருமளவில் ஆட்களைத் திரட்ட ஸ்ரீலங்கா அரசு பல தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் பெரும் அச்சுறுத்தலையும், தெற்கில் மீண்டும் தலைதூக்கியுள்ள ஜே. வி. பி. யின் நடவடிக்கைகளையும் அடுத்தே அரசு உடனடியாக இம்முயற்சியில் ஈடுபடவுள்ளது.
நாடு பெரும் சவாலை எதிர் நோக்கியுள்ளதாகவும் இதற்காகப் பாதுகாப்பிற்குப் பெரு
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 63 கார்த்திகை 29 ஜ: அவ்வல் பிறை: 27 இதழ்: 234
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-12-1990

## காங்கிரஸ் பிரசாரம்: பத்திரிகைகள் கண்டனம்

(சென்னை)
தமிழகத்தில் கரையோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் செலுத்துவதாக இந்திரா காங்கிரஸ் மேற்கொண்டு வரும் பொய்ப் பிரசாரங்களை தமிழகப்பத்திரிகைகள் சில கண்டித்துள்ளன.
மேற்படி குற்றச்சாட்டு குறித்து பத்திரிகையாளர்கள். தமிழக கரையோரக் கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு அப்பகுதி மக்களைக் கேட்டறிந்த பின் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளனர்.
புலிகளுக்கு எதிராக மத்திய அரசும், காங்கிரஸ். அ.தி.மு.க குற்றம் சாட்டுவது போல் பாரதூரமான எதுவும் தமிழகத்தில் நடப்பதில்லையெனவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (சி)

# ● கொக்குத்தொடுவாயில் பாடசாலை மீது குண்டு வீச்சு

# ஒன்பது மாணவர் படுகாயம்

[வவுனியா]
**மணலாறு பகுதி கொக்குத்தொடுவாயில் நேற்றுமுன்தினம் 'அவ்ரோ' மேற்கொண்ட குண்டுவீச்சில் பாடசாலை ஒன்று பலத்த சேதமடைந்தது. ஒன்பது மாணவர்கள் படுகாயமடைந்தனர். ஆசிரியர், மாணவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.**

இப்பகுதியில் பலத்த குண்டு வீச்சை நடத்திய 'அவ்ரோ' கொக்குத்தொடுவாய் தமிழ் கலவன் பாடசாலை மீதும் குண்டுகளை வீசியது. இதில் பாடசாலையிலிருந்த 9 மாணவர்கள் படுகாயமடைந்தனர். பாடசாலையின் பெரும்பகுதி பலத்த சேதமடைந்தது.
விமானத் தாக்குதல் நடைபெற்றவேளை பாடசாலையில் நூற்றுக்கான மாணவர்கள் இருந்தபோதும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.
மேற்படி குண்டு வீச்சில் வேலுப்பிள்ளை வடிவேல் என்பவரின் வீடு முற்றாகச் சேதமடைந்தது.
படுகாயமடைந்தபாடசாலை மாணவர்களின் விபரம் வருமாறு; சி. யோகராணி (வயது 12), ம. மங்களராணி (வயது 12), இ. பத்மலதா (வயது
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கில் உடனடியாக யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துமாறு ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவுக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.
இம்மகஜரை மல்லாகம் கிராம அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் அனுப்பிவைத்துள்ளார்.
அம்மகஜரில் கடந்த 6 மாத காலத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
இம்மகஜர் வெளிநாட்டு தூதரகங்களுக்கும், வெளிநாட்டு உதவி ஸ்தாபனங்களுக்கும், அமைச்சர்கள்,
(4-ம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்கில் நேற்று கடும் மோதல்

(காங்கேசன்துறை)
வலி. வடக்கில் மாவிட்டபுரம், தச்சன்காடு, வீமன்காமம் இராணுவ நிலைகளில் இருந்து முன்னேற முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் பின் வாங்கிச் சென்றது.
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுமாறு அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)
இலங்கை அரசு உடனடியாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.
பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: விடுதலைப் புலிகள் வேறுநாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல இதே நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே அரசு பிரச்சனைகளை பேசித்தீர்க்கும் கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்து பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும்". (ரி)

## இலங்கையில் வெளிநாட்டு தலையீடு; இந்தியா பெரும் அச்சம்

(புதுடில்லி)
இலங்கை உள்விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீடு அதிகரித்துள்ளதையடுத்து இந்தியா பெரும் அச்சம் அடைந்துள்ளது.
பாகிஸ்தான், சீனா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, சில அரபு நாடுகள் இலங்கையின்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நோக்கி இராணுவம் விரைவு

(கொழும்பு)
கிழக்கு மாகாணம் நோக்கி பெருமளவு ஸ்ரீலங்கா இராணுவ துருப்புகள் அனுப்பப்பட்டு வருவதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## கடலில் மிதந்து வரும் மர்ம வெடி பொருள்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்பகுதியில் 'மர்ம வெடிபொருள் குப்பிகள்' கரையொதுங்கியுள்ளன. இவை கடற்படையினரால் தயாரிக்கப்பட்டு கடலில் விடப்பட்ட வெடிபொருளாக இருக்கலாமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.
கோவளம் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இவ்வாறு இரு குப்பிகள் கரையொதுங்கியுள்ளன. அதில் வெடிப்பதற்கான சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாகம் ஏற்படுத்த அரசு மாற்று முயற்சி?

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் நோக்கில் நிருவாக சேவை அதிகாரிகளைக்கொண்ட 'இடைக்கால நிருவாக அமைப்பு' ஒன்றினை ஏற்படுத்த மாற்று முயற்சிகள் அரசு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இந்த நிருவாக அமைப்பு பிரதம செயலாளர் ஒருவரை தலைவராகக்கொண்டு இயங்கவும் இவருக்குக்கீழ் ஐந்து பேர் செயலாளர்களாகவும் கடமையாற்றவும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
இந்த அமைப்பில் மூன்று சிங்களவர்களும் ஒரு தமிழரும், முஸ்லிம் ஒருவரும் உட்பட ஐந்து பேர் செயலாளர்களாக கடமையாற்றுவார்கள்;

## இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்

(புதுடில்லி)
இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி பிரச்சனைக்கு உடனடி தீர்வு
(4-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-4158)

### எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில்- கட்டுடை முதலுதவி நிலையங்கள் இணைந்து நடத்தும் 'மாபெரும் எழுச்சி விழா'' இன்று சனிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### உயர்கல்வி மாணவர் அனுமதி

(கொழும்பு)

வெளிநாடுகளில் உயர்கல்வி பெறச் செல்லும் மாணவர்களுக்கான அனுமதியை அடுத்தாண்டுமுதல் பிரதேச கல்வித் திணைக்களம் வழங்கும்.

இதற்கான உத்தரவு வெளிவிவகார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## உணவுக்கட்டுப்பாட்டதிகாரி களஞ்சியங்களுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, தெல்லிப்பழை, சுன்னாகம், பண்டத்தரிப்பு ஆகிய ப. நோ. கூ. சங்கங்களின் களஞ்சியங்களுக்கு நேற்றுமுன்தினம் யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. செ. இ. நித்தியராஜ் திடீர் விஜயம்செய்து பார்வையிட்டார்.

மேற்படி ப. நோ. கூ. சங்கங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பொருட்களின் இருப்புகள் விபரங்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறது; களஞ்சிய இருப்புகள் எவ்வாறு பேணி வைக்கப்படுகின்றது என்பதையும் அவதானித்தார்.

சங்கங்களின் கிளைகளுக்கு திடீர் விஜயம்செய்து பாவனையாளர்களிடமிருந்து வந்த சில புகார்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை நடத்தினார்.

ப. நோ. கூ. சங்க கிளைக் குழு உறுப்பினர்களுக்கு நிவாரண அட்டைகளில் மாற்றம் செய்வதற்கு எந்தவித அதிகாரமும் இல்லையென்றும் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (153)

### ஓய்வூதியகாரர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை மத்திய வங்கி ஓய்வூதியக்காரர்களுக்கான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் குறிப்பிடப்பட்ட ஓய்வூதியர்களை கலந்துகொள்ளுமாறு சந்திப்பு ஒழுங்காளர்கள் கேட்டுள்ளார்கள்.

## சகல பாடசாலைகளும் அடுத்தாண்டு முதல் இருநேரம் இயங்கும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் அடுத்தாண்டு தொடக்கம் இருநேரப் பாடசாலையாக இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1991 ஜனவரி முதல் இது அமுல் செய்யப்படுமெனகல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை பாடசாலைகளில் மேலதிக வகுப்புகள் நடத்துவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ச)

## யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளுக்குத் தெரிவுசெய்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கொழும்பிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு பொறுப்பான பிரதம ஆணையாளரை வானொலி செய்தி மூலம் கேட்டுள்ளார். (153)

## இறுதி யாத்திரை

(நாவற்குழி)

பலாலியில் இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் வீரமரணமடைந்த லெப்டினன் கரிகரனின் இறுதியாத்திரை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கெருடாவிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து புலிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் பாண்ட் வாத்தியத்துடன் பூதவுடல் சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புலிகளின் மரியாதை வேட்டுக்களுடன் தகனம்செய்யப்பட்டது. (107)

## மாநகர வரி அறவீட்டில் எவ்வித மாற்றமுமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் 1991ம் ஆண்டிற்கான சோலைவரி மதிப்பீட்டுஅறவீட்டில் எவ்வித மாற்றமில்லை என்றும் 1990ம் ஆண்டு மதிப்பீடு அறவிட்டுப் பிரகாரமே 1991ம் ஆண்டிற்கும் மேற்கொள்ளம்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; தற்போதைய சூழ்நிலை காரணமாக 1991-ம் ஆண்டிற்கான வரிமதிப்பு அறிவித்தல்கள் உரிய காலத்தில் அச்சிட்டு விநியோகிக்க முடியாமல் உள்ளது. இது விடயமாக வரி மதிப்பு அறிவித்தல் கூடிய விரைவில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (153)

## விடுதலை வீரர் சுட்டுக்கொலை!

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் நகரில் விடுதலை வீரரான மௌலானா சசிர் முகமதுமசூதி நேற்றுமுன்தினம் அவரதுஇல்லத்தில் வைத்து இனந்தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முகமூடியணிந்த இருவர் அவரது இல்லத்துக்குள் அத்துமீறிப் புகுந்து மிக சமீபமாக நின்று சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபின் சாதுரியமாகத் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

87 வயதான இவர் முன்னரும் பல தடவைகள் கொலை முயற்சியிலிருந்து தப்பியவர் எஸ்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## தமிழ் குழுக்களுக்கு ஊர்காவல்படையில் சேர ரஞ்சன் அழைப்பு

(கொழும்பு)

புளொட், ரெலோ. ஈ. பி. டி. பி. ஆகிய தமிழ்க் குழுக்கள் உடனடியாக அரசுஅமைக்கும் ஊர்காவல் படையில் சேர்ந்துகொள்ளுமாறு பாதுகாப்பு இணையமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன நேற்று அறைகூவல் விடுத்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பெருந்தோட்டத் தொழில் துறை சம்பந்தமான மசோதா மீதுஉரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசு எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் மேற்படி தமிழ்க்குழுக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (க)

## ராசி பலன்

15-12-1990

சனிக்கிழமை

சதுர்த்தசி முழுவதும். அனுஷம் வைகறை 5-30 வரை. நல்ல நேரம் மாலை 3-21 முதல் 4-51 வரை. ராகுகாலம் காலை 9-21 முதல் 10-31 வரை.

மேடம்: பொருளாதார முட்டுக்கட்டை, குடும்பத்தில் மனஸ்தாபம், காரியத்தடை, தொழில் பாதிப்பு.

இடபம்: நல்லோர் சந்திப்பு, கடன் வரவு. மாமனார் கவலை. வாழ்க்கை வசதி.

மிதுனம்: பொதுத்துறை ஈடுபாடு. தான தர்மம். எதிர்பாராத முடிவு. கலந்துரையாடல்.

கடகம்: குடும்பப் பிரிவு, பயணங்களால் தொல்லை. தொழில் மாற்றம். அதிக யோசனை.

சிங்கம்: குடும்பக் கவலை. அந்நியர் தொல்லை. பணக் கஷ்டம். நண்பருதவி. அலைச்சல்.

கன்னி: எதிர்பாராத உதவி. தொழில் லாபம். குடும்ப மகிழ்ச்சி. விருந்துபசாரம்.

துலாம்: மனப்போராட்டம். கண்ணியக் குறைவு. அதிக பிரயாசம்.

விருச்சிகம்: எண்ணம்போல் வாழ்வு. சுபகாரியச் செலவு. தொழில் லாபம். வைத்தியச் செலவு. ஆலய தரிசனம்.

தனுசு: படபடப்பு. தொழில் குறை. அதிக யோசனை. குடும்ப விரோதம். அகால போசனம்.

மகரம்: குடும்பத்தில் கருத்து முரண்பாடு. தொழில் கஷ்டம். அந்நிய வாசம். பணக் கஷ்டம்.

கும்பம்: எதிலும் தாமதம். காரியத் தடை. பொருளாதாரக் கஷ்டம், வீட்டில் பிரச்சனை.

மீனம்: மனக்குறை. தொழில் போட்டி. குறை கேட்டல். பயணங்களால் அலைச்சல். நோய்.

ஜோஸ்யர்.

## பங்குத்தந்தை உதவி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கத்தோலிக்கத் திருச்சபையின் பங்குத்தந்தை அருட்திரு. எம். எம். வி. அமிர்தகுமார் தொழில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, புளி, பிஸ்கட், லக்ஸ்பிறே போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை நிவாரண உதவியாக வழங்கியுள்ளார். (133)

## ராணுவ நடவடிக்கையால் யூனியன் கல்லூரிக்கு 35 லட்சம் ரூபா நஷ்டம்

(காங்கேசன்துறை)

தொடர்ந்து இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 75 லட்சம் ரூபாவுக்கு மேல்நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் அண்மையில் நடத்திய மதிப்பீடு ஒன்றிலே மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1985, 86-ம் ஆண்டுகளில் இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்து வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியால் இந்தப்பாடசாலையில் நவீனமுறையில் மிகப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடங்களும் இடிந்து வீழ்ந்துநொருங்கிப் போயுள்ளன.

விஞ்ஞான ஆய்வுகூடம், ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்கள் தந்தைசெல்வா தொடக்கநிலைப் பள்ளியுட்பட பல கட்டிடங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (86)

## பிரிந்தவர்களை இணக்கமன்று சேர்த்துவைத்தது

(நாவற்குழி)

பிள்ளைகளின் கிரகம் கூடாது எனக் கூறி நான்கு வருடங்கள் பிரிந்து வாழ்ந்து வந்த கணவனும், மனைவியும் சாவகச்சேரி சிற்றூர் இணக்க மன்றினால் மீண்டும் சேர்த்துவைக்கப்பட்டனர்.

விடத்தற்பளையைச் சேர்ந்த மு. செல்வரத்தினம் என்பவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த அவரது மனைவி திருமதி அருளானந்தபூபதி செல்வரத்தினம் என்பவருமே இரண்டு பிள்ளைகளின் கிரக பலனைக் காரணம் காட்டிப் பிரிந்து வாழ்ந்தவர்களாவர். (107)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்தில் இயங்கிவந்த காங்கேசன்துறை கொத்தணியைச் சேர்ந்த தையிட்டி கணேச வித்தியாசாலை இன்று முதல் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திற்கும், காங்கேசன்துறை மகாவித்தியாலயம், உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்திற்கு மாற்று ஒழுங்குத்திட்டத்தின்மூலம் இயங்கவுள்ளது. (153)

## வடமராட்சியில் — தனியார் வீடுகளில் கல்லூரிகள் இயங்குகின்றன

[வடமராட்சி]

வடமராட்சியில் உயர் கல்லூரிகள் தனியார் வீடுகளிலும், மர நிழல்களிலும் இயங்கிவருகின்றன.

தற்போது நடைபெற்று வரும் விமானக்குண்டு வீச்சுக் காரணமாக வடமராட்சியில் பல பாடசாலைகள், தனியார் வீடுகளிலும், மாட்டுக் கொட்டில்களிலும், மர நிழல்களிலும் இயங்கிவருகின்றன.

இப்படி நடைபெற்றுவரும் கல்வியை மீண்டும் கல்விக் கலாசாலைகளில் இயங்கச்செய்வது மிகவும் கஷ்டமான காரியம் எனப் பெற்றோரும், ஆசிரியர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதத்தில் மந்திகை மெதடிஸ்த மிஷன் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் பாடசாலை, வேலாயுதம் வித்தியாலயம் போன்ற கல்விக்கூடங்களின் மேல் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (51)

## உதவி அரச அதிபர் சங்கானைக்கு விஜயம் செய்வார்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு விஜயம் செய்து காரைநகர் கிராம சேவை அலுவலர்களையும், காரைநகர் பொதுமக்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது தங்கியிருக்கும் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களை, இம் மாதம் 17ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு, பரந்தன் முரசுமோட்டையில் இயங்கும் மக்கள் வங்கிக் கட்டடத்தில் தங்கியிருக்கும் வடபிராந்திய முகாமையாளர் திரு. செ. வேலாயுதபிள்ளையை சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# காலம் பதில் சொல்லும்

"பத்தில் வியாழன் பதியை விட்டு விலகும்" என்பது சாஸ்திர விதி.

பத்தாண்டுகளுக்கு மேல் ஆட்சிபீடத்தில் கொடிகட்டிப் பறந்தவர்களுக்கும் பத்துமாதம் பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தவர்களுக்கும், ஆபத்துண்டு என்பது அரசியல் விதி போலும்!

இதன் அடிப்படையில் 1990ம் ஆண்டு இறுதிப் பகுதி-உலகின் புகழ் பூத்த தலைவர்கள் பலரின் மணி மகுடங்களை தட்டிக் கொண்டுபோய் விட்டது!

மக்கள் சக்தியைக் கவர்ந்திழுத்து ஆண்டவர்களும், இராணுவ பலத்தால் மக்களை ஆட்டிப்படைத்து ஆட்சி பீடத்தைக்கட்டிக்காத்த தலைவர்களும் பதவியை விட்டோடும் கதி பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது!

'இரும்பு உறுதி கொண்ட மாது' என்று முத்திரையிடப்பட்டிருந்த மதி மார்க்கிரட் தட்சர் மக்கள் சக்தியை தன் வசப்படுத்தி 11 ஆண்டு காலம் புகழ் பூத்திருந்திருந்த போதிலும் கட்சிப் பூசலில் பதவி துறக்க வேண்டியேற்பட்டது!

உயர்மட்ட ஊழல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நவபாரதத்தை கட்டி எழுப்ப முன்வந்த திரு. வி. பி. சிங், இன, மத உணர்வலைகளால் ஏற்றுண்டு பத்து மாதத்திலேயே பதவியிழந்தார்!

பாகிஸ்தானில் ஜனநாயகதேவதையின் மறுரூபமாக மக்கள் கருதி தேர்தலில் அமோக வெற்றியீட்டிக் கொடுத்து பதவியேறியதிருமதி பெனஸீர் பூட்டோ, அதே ஜனநாயகத்தேர்தலின், தில்லு முல்லுகளால் பதவியிலிருந்து இறக்கப்பட்டார்!

சின்னஞ்சிறு தீவான சிங்கப்பூரை சுதந்திர வர்த்தக வலயத்தின் மூலம் உன்னத பூமியாக்கி உலகின்உதாரண பிரதமராகத் திகழ்ந்த லீகுவான்யூ காலம் வரதானகவே முன்வந்து பதவியை துறந்து விட்டார்.

பத்தாண்டுக்குமேலாக இராணுவ பலத்துடன் நாட்டை ஆட்டிப்படைத்த பங்களாதேஷ்ஜனாதிபதி எர்ஷாத், எதிர்கட்சியினரால் பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு ஊழல் விசாரணைக்கும் உட்படுத்தப் பட்டுள்ளார்.

'தொழிலாளர் வர்க்கம், அரசையே நிலகுலக்கும் சக்தியைப் பதை உலகுக்கு உணர்த்திய போலந்து நாட்டின் பிரபல தொழிற்சங்கவாதி வலேஸா ஆட்சிப்பீடத்தையும் கைப்பற்றிவிட்டார்.

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் பல ஜனநாயக அரசுகளை உருவாக்கி தன்மைப் பீடங்களை மாற்றி விட்டனர்.

எமது நாட்டிலோ ஜனநாயகம் என்றதாரக மந்திரம் ஓதி. அவசர காலச்சட்டம், ஊரடங்கு உத்தரவுகள் மூலம், மறைமுக இராணுவ ஆட்சியை 1977ம் ஆண்டு முதல் இன்று வரை நீடித்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சிஅரசுக்கோ சாஸ்திர அரசியல் விதிகள் இதுவரை எதுவும் செய்யவில்லை!

அதி உத்தமராம் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இராஜரீக இராணுவ ஆட்சியும் அதன் பிதாமகர்சியான அவரின் உத்தம புத்திரராக வர்ணிக்கப்பட்ட திரு. ஆர். பிரேமதாசாவின் பௌத்த காருண்ய இராணுவ ஆட்சியும் மக்கள் விடும் கண்ணீருக்கும் படும் வேதனைக்கும் காலம் பதில் சொல்லும்.

— மயூரன்

# பலாலி பயிற்சிக் கலாசாலை
# திருநெல்வேலியில் ஆரம்பம்

- சி. நடராசா -
(கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஓர் ஆசிரியர் கலாசாலையையும ஓர் ஆங்கிலக் கல்லூரியையும் 200-க்கு மேற்பட்ட தமிழ்ப்பாடசாலைகளையும் நிர்வகித்து வந்தது. பாடசாலைகளை நிறுவினால் மட்டும்போதாது, அவற்றை நெறிப்படுத்த நல்லாசிரியர்களையும் உருவாக்கிக் கொண்டே இருக்கவேண்டும் என்ற கொள்கையடிப்படையிலேதான் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை இயங்கிவந்தது. ஏனைய கலாசாலைகளிலும் பார்க்க பல வசதிகளைக்கொண்டதாக இது விளங்கியது. மலேசியா அன்பர்களின் உதவியால் கலாசாலையின் பிரதான மண்டபம் கட்டப்பட்டிருந்தது. விஞ்ஞான ஆய்வுகூடம் வசதியுடன விளங்கியது. நூல்நிலையம் மிகச் சிறந்து விளங்கியது. என்சைக்கிளோபீடியா பிறிட்டானிக்கா இருத்தாறு பகுதிகளும், மதுரைத் தமிழ் பேரகராதி தொடக்கம் எல்லா கலைக்களஞ்சியங்களும் காணப்பட்டன. விவசாயத்திற்குப்போதிய செம்மண் நிலமும் இருந்தது. இத்தகைய வசதி பொருந்திய கலாசாலை 1963 ஜனவரி 14-ம் நாள் திடீரென மூடப்பட்டது. இதனுடன் சேர்த்து பலாலி ஆசிரியர் கல்லூரியுடன் இயங்கிவந்த பொதுப் பயிற்சி நெறியும் அன்றே மூடப்பட்டது. சைவவித்தியா விருத்திச் சங்கம் இதனைக் கண்டித்து அறிக்கைகள் விட்டது. குறிப்பாக அப்போதைய கல்வி மந்திரியான டாக்டர் பதியுதீன் முகமது முஸ்லீமாக இருந்தமையால் சைவர்களுக்குத் தீங்கு இழைத்துவிட்டார் எனச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் செயலாளர் நியாயவாதி திரு. சு. இராசத்தினம் துண்டுப்பிரசுரமே விட்டார். மீண்டும் திறக்கும்படி வேண்டுகோள் விட்டார். ஆசிரியர் சங்கங்கள் வேண்டுகோள் விட்டன. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

சிங்கள பயிற்சிபெற்ற ஆசிரியர்களிலும் பார்க்க தமிழில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் வீதம் கூடுதலாக இருந்தமையினால் குறைந்த வீதத்தினரின் தொகையைக் காட்டுவதற்கு பதிலாக தமிழ்ச் சிறார்களின் கல்வியில் கைவைக்கும் உள்நோக்குடன் தமிழ் ஆசிரியர் கலாசாலைகள் மூடப்பட்டன. வடமாநிலத்தில் எந்த ஆசிரியர் கலாசாலைகளை மூடலாமென கலந்தாலோசிக்கவும் நேரில் பார்க்கவும் கல்வி மந்திரி யாழ்ப்பாணம் வந்தார். அப்போதைய யாழ் கல்விப் பணிப்பாளர் சைவப் பெரியார் சிவா உ. சோமசேகரம் சிபார்சின் பேரில் சைவாசிரிய கலாசாலையும், பலாலியில் இயங்கிய பொதுப் பயிற்சிப் பிரிவும் மூடப்பட்டன. அந் நேரத்தில் கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையும், கிறிஸ்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட நல்லூர் ஆசிரியர் கலாசாலையும் அரசினரால் நிர்வகிக்கப் பட்டு வந்தன.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஒரேயொரு ஆசிரியர் கல்லூரி மூடப்பட்டதை சைவப்பெரியோர் கண்டித்தனர். நல்ல நல்லாசிரியர்களையும், ஆசிரிய மணிகளையும், பண்டிதர்களையும், வித்துவான்களையும் உருவாக்கிய கலாசாலை மூடப்பட்டமை தமிழர் கல்விக்கு இடுக்கண் விளைத்தது. இத்துடன் நின்றுவிடவில்லை. காலப் போக்கில் நல்லூர் ஆசிரியர் கல்லூரியும் அதனைத் தொடர்ந்து கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரியும் மூடப்பட்டன.

சிங்களப் பகுதியில் புதிய புதிய ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்பட தமிழ்ப் பகுதிகளில் முன்னேறால் ஆரம்பிக்கப்பட்ட நான்கு கல்லூரிகள் மூடப்பட்டன. எஞ்சியவையாக பலாலி விசேட பயிற்சிப் பகுதியும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் விடப்பட்டன. போரின் விளைவால் விமான நிலையத்திற்கு அருகில் அமைந்த பலாலிஆசிரியர் கல்லூரியும் இடம்பெயர நேர்ந்தது. தற்காலிகமாக கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பகுதியிலும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலைப் பகுதியிலும் இயங்கி வந்தது. முன்னர் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்கிய திருநெல்வேலியில் பலாலி ஆசிரியர் கலாசாலை குடிபுகுவது தமிழர் கல்வியின் மேம்பாட்டிற்கு அறிகுறியாகும்.

14-01-1963-ல் திருநெல்வேலி ஆசிரியர் கல்லூரி மூடப்பெற்றதும் முன்னாள் முகாமையாளரான சைவ வித்தியா விருத்திச் சங்கமே காணியையும், கட்டடங்களையும் பொறுப்பேற்றுக்கொண்டது. மீண்டும் ஆசிரியர் கலாசாலை திறந்தால் தருவதாகவும் செயலாளர் திரு. சு. இராசரத்தினம் கூறினார். அன்றைய கல்விப் பணிப்பாளர் சி. உ. சோமசேகரம் அதனைப் பெற முடியவில்லை. பின்பு திரு. எஸ். தணிகாசலம் வடமாநில கல்விப்பணிப்பாளராக வந்ததும் முத்துத்தம்பி வித்தியாசாலையை மகாவித்தியாலயமாக்கி முகாமையாளரின் அன்புடன் காணி கட்டடங்களைப் பெற்றுக்கொண்டார். ஆயினும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இந்து போர்ட் சு. இராசரத்தினம் மற்றைய சைவப் பெரியார்கள் பலர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை திறக்கப்படவேண்டுமெனக் கனவு கண்டனர். இன்றைய கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் வளாகத்தில் மீண்டும் பலாலி ஆசிரியர் கல்லூரி இங்குவது அவர்களின் கனவினை நனவாக்குகின்றது. இப் பெரியார்களின் எண்ணங்களை நிறைவேற்றச் செய்த இன்றைய கல்விப் பணிப்பாளரைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் பாராட்டும். திருநெல்வேலியில் இயங்கவிருக்கும் இக்கலாசாலை தலைசிறந்த பயிற்சிக் கலாசாலையாக மிளிரட்டும். இக்கலாசாலை தொடர்ந்து சிறப்புடன் விளங்க கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய பயிலுனர்கள் ஆகிய நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

## ★ மிதுன ராசியினருக்கு கண்டமுண்டு!
## ★ கடக ராசியினருக்கு தொழில் கஷ்டம்!!
## ★ சிங்க ராசியினருக்கு தடங்கல் நீங்கும்!!

### ஜோஸ்யர் கணிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

**மிதுனம்:** எதிலும் பட்டும் படாமலும் விடும் விடாமலும் செல்லும் மிதுன ராசியினருக்கு அட்டமச் சனியாகும். சனி 8-ல் அமர்ந்து 3, 7, 10-ம் பார்வையாக 2, 5, 10ம் வீடுகளையும் பார்ப்பதால் தேவைக்கேற்றவாறு பணப் புளக்கம் உருவாகும். குடும்பத்தில் வாக்குவாதம் உருவாகும். வார்த்தைகளை அவவாகப் பயன்படுத்துங்கள். மனைவி தந்தையுடன கருத்து வேற்றுமை நிலவும். கடுமையான வேலைப்பளு இருந்துவரும். அதிகாரிகவ ஒததுழைபபுக் கிட்டும். பெண்களாயின் பதவி உயாவு. விரும்பிய இடமாற்றம் கிட்டும். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்பதை மறநது செயற பட்டால் கவலைகள உருவாகும். மாணவராயின் கலவியல் அதிக கவனம் தேவை. நீரினால் கண்டமுண்டு. அவதானமாக இருக்கவும்.

**கடகம்:** காரியத்தில் கண்ணாயிருக்கும் கடக ராசியினருக்கு சனி பகவான் 7-ம வீட்டில இருந்துகொண்டு 3, 7, 10-ம பார்வையாக 1, 4, 9-ம் வீடுகளைப் பார்ப்பதால் உடல நலனில் கவனம் தேவை. தொழிலில் கடும் உழைப்பு வேண்டியநிலை உருவாகும். குடும்பத்தில் குழப்பநிலை உருவாகி ஒருவரை ஒருவர் பிரிய வாய்ப்புண்டு. வாகனங்களை இழக்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு திடீர் இடமாற்றம், பதவி குறைப்பு. அலைச்சலூடான பயணங்கள் வர வாய்ப்புண்டு. தொழிலில் வருமுன் காக்கும் உபாயம்நன்மைதரும். மாணவர்களாயின் வெளிநாட்டுப் பயணம் கைகூடும். உற்றார், உறவினர் உதவிகள் தொடர்ந்து கிட்டும்.

**சிங்கம்:** சீரிய சிந்தனையும் கூரிய செயல்திறனும் மிகக சிங்கராசியினருக்கு 6ம் வீட்டில் சனி அமர்ந்து 3, 7, 10ம் பார்வையாக 3, 8, 12ம் வீடுகளைப் பார்ப்பதால், விரோதிகளை வெல்லும் ஆற்றல் அதிகரிக்கும். நோய்நொடி அகலும், கடன் தொல்லைகள் நீங்கும், வாக்கினால தனலாபமுண்டு. தடைப்பட்ட திருமணங்கள் கைகூடும், தொழிலில் முன்னேற்றமுண்டு, திட்டங்களில் இருந்த முட்டுக்கட்டை, தடைகள் நீங்கும். கணவன் மனைவி நிலையிலிருந்த பிரிவு நீங்கி ஒற்றுமை மலரும். வைத்தியச்செலவு அதிகரிக்கும், தொழில் துறைகளில் எதிர்பாராத அதிர்ஷ்டம கிட்டும், பெண்களாயின புத்திர பாக்கியமுண்டு, திருமணத் தடை அகலும், மாணவராயின் கடந்த காலங்களில் இருந்த கவலைகள் நீங்கி கல்வியில் உயர்ச்சி பெறலாம், வெளி நாட்டுப்பயணங்கள்கைகூடும்.

**கன்னி:** கனிந்த மனமும் கள்ளமற்ற குணமும்கொண்ட கன்னி இராசியாளருக்கு சனி பகவான 5ம் வீட்டிலிருந்து கொண்டு 3, 7, 10ம் பார்வையாக 2, 7, 11ம் வீடுகளைப் பார்ப்பதால், கடந்தகால துன்பங்கள் நீங்கும். சரளமான வருமானம் கிட்டும், மனையோகமுண்டு. மனைவியின் உடல்நிலையில கவனம்தேவை. தொழிலில் எதிர்பார்த்த லாபமுண்டு. புத்திரவழியால் செலவுகளுண்டு, உயர் அதிகாரிகள் ஆதரவுண்டு, பழைய கடன்களைக் கொடுக்கவும், தொழிலில் முதலீடுகள் அதிகரிக்கவும் சூழ்நிலை உருவாகும். பெண்களாயின் குடும்பத்தின் வேற்றுமை குறையும், உடல்நலம் கவலைதராது, மாணவர்களாயின் நல்லபெறுபேறுகள் கிட்டும்.

**துலாம்:** துவண்டுவிடாத குணம் கொண்ட துலாம் ராசியாளருக்கு சனி பகவான் 4ல் இருந்துகொண்டு 9, 7, 10ம் பார்வையால் 1, 6, 10ம் இடங்களைப் பார்ப்பதால். புதிய வாகனம் வாங்கவும், வீட்டுவேலைகளை முடிக்கவும் வசதி பெருகும். கடன்கள் நீங்கும், தொழில் வாய்ப்பு உருவாகவும் புதிய முதலீடுகளும இருந்துவரும், செய்தொழிலில் இருந்துவந்த அலைச்சல் குறைந்து நிம்மதி உருவாகும். நெடுநாளைய குறிக்கோள் ஒன்று கைகூடும், அரசஊழியர்களுக்கு இடமாற்றமும, பதவிஉயர்வும் கிட்டும், பெண்களாயின் தாயாருடனிருந்து வந்த கவலைகள் நீங்கும், மாமாமார், மாமிமார் பிரச்சனை நீங்கும். மாணவர்களாயின் கடினஉழைப்பின்மூலம் எதிர்காலததில திறமைச்சித்திகள் பெறலாம். துலாம் ராசியாளருக்கு சனிமாற்றம் கடின உழைப்பால் களிப்பைப் பெறும் காலமாகும்.

**விருட்சிகம்:** வீரம் செறிந்த விருட்சிக ராசியினருக்கு சனி பகவான் 3-ம் வீட்டில் இருந்து கொண்டு 3, 7, 10ம் பார்வையால் 5, 9, 12-ம் வீடுகளைப் பார்வையிடுவதால் உடல்நலம் சீரடையும். புத்திர பாக்கியம் கிட்டும். தந்தையுடன் இருந்த கருத்து முரண்பாடு நீங்கும். சகோதரவகையால் புகழ்கிட்டும். வாக்கினால் ஏற்பட்ட குழப்பம் நீங்கி குடும்பத்தில் அமைதி உருவாகும். அரசாங்க துறையினருக்கு பதவி உயர்வும், பாராட்டும் கிட்டும். பெண்களாயின் குடும்பத்தில் நிம்மதி பெருகி சுபநிகழ்வுகள் இடம்பெறும். மாணவர்களாயின் இதுவரை இருந்துவந்த தடைகள் நீங்கி கல்வியில் மேன்மையடைவர். வியாபாரிகளுக்கு தொழிலில் லாபம் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். வாழ்வில் புதிய திருப்பத்துக்கு வழி வழிக்கும் காலமாகும்.

(மிகுதி நாளை)

## மட்டக்களப்பில் 75 வீதமான வீடுகள் உடைக்கப்பட்டுக் கொள்ளை

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் அகதி முகாம்களிலுள்ள சுமார் ஒரு லட்சம் தமிழர்களில் எழுபத்தைந்து வீதமானவர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களினால் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களாக இது தொடர்பான புகார் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களில் தினமும் 300 க்கும் அதிகமானவர்கள் மட்டு நகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி-61)

## ஈழத்து படைப்புகளை வாங்க புலிகள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ எழுத்தாளர், கவிஞர்கள் அனைவரினதும் படைப்புகளை விலைகொடுத்து வாங்குவதற்கு விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவு முன் வந்துள்ளது.

இதுபற்றி விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை தெரிவிக்கையில்,

தமிழீழ எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் இது வரை காலமும் வெளியிட்டுள்ள புத்தகங்கள் அனைத்திலும் தலா பத்துப் பிரதிகளை கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவு தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அச்சுவடிவிலுள்ள புத்தகங்களோ அல்லது ரோனியோ வடிவில் வெளியான புத்தகங்களோ, காலத்தால் முந்திய எழுத்தாளர் பிந்திய எழுத்தாளர் என்றபாகுடின்றி அனைவரினதும் படைப்புகளும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (வி)

## மகனை மீட்க முயன்ற தாயும்மகனும் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் விழுந்த மகனை காப்பாற்ற முயன்றபோது தாயும், மகனும் பலியான துயரசம்பவம் ஒன்று காரைநகரில் இடம்பெற்றுள்ளது.

காரைநகர் மருதபுரத்தில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம்இடம்பெற்றது. இதில் சுப்பிரமணியம் பூமணி (வயது 32), சு.லோகேஸ்வரன் (வயது 9) ஆகியஇருவருமே கிணற்றில் வீழ்ந்து பலியானவர்களாவர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: கிணற்றினருகில் விளையாடிக்கொண்டிருந்த மகன் தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்ததைகண்ட தாய் மகனை காப்பாற்ற கிணற்றில் குதித்தார் எனினும் சேலை சிக்கிக் கொண்டதால் இயலாத நிலையில் தாயும் மகனும் பலியானார்கள். (சி)

## உயிர் ஊசலாடுகிறது

(வவனியா)

வவனியாவில் இராணுவம் பயணிகளை சோதனையிட்டபின்னர் செல்ல அனுமதித்தால் ''கொலைக்களத்தை'' தாண்டிச் செல்வது கஷ்டமான காரியமாகவுள்ளது.

அங்குதான் கறுப்பு உடையணிந்த ''எம்மவர்கள்'' கத்திகளை பார்வைக்கு வைத்த நிலையில் காத்திருக்கிருர்கள். அவர்கள் சந்தேகம் எமது விதியை நிர்ணயிப்பதாக இருப்பதாக நேற்றுமாலை வந்த பயணிகள் ''ஈழநாடு'' வுக்கு தெரிவித்தனர். (எஸ்)

## கிளிநொச்சியில் ஹெலி தாக்கி மூவர் காயம்

(நல்லூர்)

கிளிநொச்சி 155ம் கட்டைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதல் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். பாரதிபுரத்திலிருந்து முரசுமோட்டை கூலிவேலையாட்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் வண்டிகளை நோக்கியே இத் தாக்குதல் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆர். செல்வரட்ணம் (வயது 40) யேயா, அலோஸியஸ் (வயது 35) பரந்தனை சேர்ந்த ஞா. தவப்பிரகாசம்(வயது22) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்

## பூந்தோட்ட முகாமில் ‘பங்கர்’ வெட்டும் தமிழர்

(வவுனியா)

தென்பகுதியிலிருந்து வரும் தமிழர்களைகொண்டு இராணுவம் வவுனியா பூந்தோட்டம் முகாமில்'பங்கர்களை' வெட்டுவிப்பதாக அங்கிருந்து வந்த பலர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் பல பங்கர்களை தமிழர்களைக்கொண்டே இராணுவம் வெட்டுவித்ததாகவும், அப்போதுகூட பலர் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்,

பூந்தோட்டத்தில் தமிழர்கள் தொடர்ந்தும் மோசமாக தாக்கப்படுவதும், கைதுசெய்யப்படுவதும் தற்போது வழமையான சம்பவமாகிவிட்டதாம். (சி)

## கடலில் மிதந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டைதீவு கடலிலும் இவ்வாறு கரையொதுங்கிய பொருள் ஒன்றே வெடித்து கடந்த புதன்கிழமை இருவர் உயிரிழந்தது தெரிந்ததே. (சி)

## தமிழகம் முழுவதும் 81 தமிழர்கள் கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் பொலிஸார் நேற்று நடத்திய திடீர் சோதனையில் 81 இலங்கை தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, செங்கை அண்ணா, சேலம், திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்தச் சோதனைகள் நடைபெற்றது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பாதுகாப்பான இடமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை திருச்சியில் தனியார் மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்ற ஆறு இளைஞர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பயிலுநர் ஆசிரியர் சங்க விசேடகூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை 10.மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதால ஆசிரியர்கள் அனைவரும் தவருது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வலி-வடக்கில் இராணுவத்திடம் சிக்கிய 76 பேரை மீட்க முயற்சி

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் இராணுவ நடவடிக்கையின்போது சிக்கிக்கொண்ட 76 பேரையும் மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவிக்கப்படுகிறது.

கடந்த அக்டோபர் 19ம் திகதி ஆரம்பமான இராணுவ நடவடிக்கையின்போது அங்கிருந்து வெளியேறமுடியாமல் வயோதிபர்கள் உட்பட 76 பேர் சிக்கிக்கொண்டனர்.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் இவ்வாறுசிக்கிக்கொண்டவர்களின் விபரங்களைத் திரட்டி அவர்களை மீட்க உதவுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுவிடம் கோரியிருந்தது.

இதையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் படிவம்ஒன்றுவழங்கப்பட்டது. இப்படிவம் பூர்த்திசெய்யபட்டு இவர்களிடம் வழங்கப்பட்டதும் மேற்படி 76 பேரையும் சென்று பார்த்து நிலைமையை அறியவும், இருப்பவர்களை மீட்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தெரிவித்தார். (86)

## கிழக்கு நோக்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் புலிகளின் கடும் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதையடுத்தே இந்த இராணுவ அணிகள் அங்கு அனுப்பப்பட்டு வருகிறது.

கடந்த சில தினங்களில் புலிகளின் தாக்குதலில் இராணுவ அதிகாரிகள் உட்பட 18 இராணுவத்தினர் கிழக்கில் கொல்லப்பட்டது தெரிந்ததே. (கி)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் பெண் போராளியான நிதி (இரத்தினசிங்கம் சசிகலா) கிளிநொச்சி நேற்றுமுன்தினம் வீரமரணமடைந்தார்.

கடந்த மாதம் 7-ம் திகதி வீமன்காமத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இவர் நேற்றுமுன்தினம் மரணமானார். (வி)

## இலங்கையில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உள்விவகாரத்தில் பெருமளவு அக்கறை செலுத்திவருகின்றன. இதனல் இந்தியாவுக்கு பெரும் நெருக்கடியும் தோன்றியுள்ளது,

சீனப் பிரதமர் திரு.லீ பெங்கின் விஜயமும், பாகிஸ்தான் பெருமளவு இராணுவ உதவி வழங்க முன்வந்துள்ளதும் இந்தியாவுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. [சி]

## யுத்த நிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (சி)

## கொக்குத்தொடுவாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

13). ப. கண்ணன் (வயது 12), ஈ. கமலாம்பிகை (வயது 15), அ. அன்னலட்சுமி (வயது 13), சு. சிவநாத் (வயது 13). அ. யூட் (வயது 14), ந. துரைராசா (வயது 14). (வி)

## ராணுவத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மளவு படைபலம் தேவைப்படுவதாகவும் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (சி)

## கிளிநொச்சிக்கு லொறிகளில் உணவு, பசளை எடுத்துவரப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 27 லொறிகளில் உணவுப் பொருட்களும் 7 லொறிகளில் உரமும் கொண்டுவரப்பட்டது.

18 லொறிகளில் 160 மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சால் வழங்கப்பட்டு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் அவற்றை கையேற்று கிளிநொச்சிக்கு கொண்டு வந்துள்ளதாக அதன் செயலாளர் எஸ். சிவராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவற்றில் 10 மெற்றிக்தொன் அரிசியும், 20 மெற்றிக்தொன் மாவும், 20 மெற்றிக்தொன் சீனியும், 20 மெற்றிக்தொன் பருப்பும் அடங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

மேலும் 8லொறிகளில் உணவுப் பொருள்களும், 7 லொறிகளில் அமோனியா முதலான உரவகைகளும் மாவட்ட செயலகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. (83-ரி)

## இந்திய அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காண இந்தியா இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும்.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற குழுசெயலர் திரு. இரா. அன்பரசு மத்திய அரசை கோரியுள்ளார். இதுகுறித்து அவர் நேற்று இந்திய உள்துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லாவை சந்தித்துப் பேசினர்.

''இலங்கையின் வடக்கு-கிழக்குப்பகுதிகளில் தற்போது தோன்றியுள்ள மோசமான யுத்த நிலைமைக்கு முன்னைய இந்திய மத்திய அரசின் தவறான அணுகுமுறையும், தமிழக அரசின் உறுதியற்ற நடவடிக்கையுமே காரணங்களாகும்'' என்றார். (ஐ)

## வலி. வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 8-30மணியளவில் தச்சன்காடு பகுதியில் இருந்து இராணுவம் அயற் பகுதிகளுக்குள் முன்னேற முயன்றது. பின்னர் காலை 10 மணியளவில் வீமன்காமம் சாந்தை பகுதியிலும்மாவிட்டபுரம் பகுதியிலும் நிலைகொண்டுள்ள இராணுவமும் அயற் பகுதிகளுக்குள் ஊடுருவமுயன்றன.

ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டு கலிபர் தாக்குதலை நடத்த சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு இராணுவத்தினர் முன்னேற முயன்ற சமயம் விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்த்து தாக்கினர்.

காலை முதல் நண்பகல் வரை மேற்படி பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றன.

நண்பகலின்பின் இராணுவம் பின்வாங்கித் தமது நிலைகளுக்குச் சென்றடைந்தது.

மாவிட்டபுரம், அரசடி, வீமன்காமம், கொல்லங்கலட்டி, கிளானைப் பகுதிகளை நோக்கிக் கடுமையான ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. (86)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன் ரோசில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/190306/81.